[1979 மார்ச் 10

நகராட்சிப் பணியாளர்களது ஒய்வூதியம்.

* வினா எண். 325— திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நகராட்சியில் பணியாற்றி 1970ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 14-ம் நாளுக்கு முன் ஒய்வு பெற்றவர்களின் ஒய்வூதியத்திற்கும் 1970ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 14-ம் நாளுக்குப் பின் ஒய்வு பெற்றவர்களின் ஒய்வூதியத்திற்கும் வேறுபாடு உண்டா?

(ஆ) ஆம் எனில், காரணம் என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு நகராட்சி பணியாளர் ஒய்வு ஊதிய திட்டம் 1970ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 14-ம் நாள் அமுலுக்கு வந்தது. அதற்கு முன் ஒய்வு பெற்றவர்களுக்கு இந்த திட்டம் பொருந்தாது.

திரு. மா. மணிமாறன் : தலைவர் அவர்களே, ஒய்வுபெற்றவர்களுக்கு ஊதியம் குறைவாகக் கிடைக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்கள். ஆகவே அந்த வேறுபாட்டைக் களைவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, 1970ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 14-ம் நாளுக்கு முன்னாலே ஒய்வுபெற்றவர்களுக்கு அட்காக் ஊதியம் என்று அரசு வழங்கியது. அதற்குப் பின்னாலே ஒய்வுபெற்றவர்களுக்குத்தான் இந்த ஒய்வூதியத்தை வழங்க அரசு உத்தேசித்திருக்கிறது.

திரு. மா. மணிமாறன் : தலைவர் அவர்களே, ஒய்வு பெற்றவர்கள் இப்போது உயிரோடு இருக்கிறார்கள், அவர்களுக்காவது இந்த ஒய்வூதியம் வழங்குவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, உயிரோடு இருப்பவர்களைக் கணக்கில் வைத்து வழங்கப்படுவதல்ல இது. 1970ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 14-ம் நாளுக்குப் பின் ஒய்வு பெற்றவர்கள் என்ற கணக்கை வைத்துத்தான் வழங்கப்படுகிறது.